பக்கங்கள் 18+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 10 சனிக்கிழமை 22.02.2025 | அதிர்வு 206

## கொலைக் கலாசாரத்துக்கு உடனே முடிவு கட்டுங்கள்!

**அரசிடம் சஜித் கோரிக்கை**



நாடு பூராகவும் தொடரும் கொலைச் சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



**கொட்டாஞ்சேனையில் தமிழ் வர்த்தகரைப் படுகொலை செய்த**

# துப்பாக்கிதாரிகள் இருவரும் பொலிஸாரால் சுட்டுக்கொலை

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் நேற்று இரவு தமிழ் வர்த்தகர் ஒருவரைச் சுட்டுப் படுகொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவரும் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் பலியாகியுள்ளனர்.

மட்டக்குளி, காக்கைதீவு கடற்கரைப் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று இரவு மறைத்து வைத்திருந்த ஆயுதங்களைக் காட்டுவதற்காகப் பொலிஸார் கைது செய்த துப்பாக்கிதாரிகள் இருவரையும் அழைத்துச் சென்றபோது, பொலிஸாரிடம் இருந்த துப்பாக்கியைப் பறித்து அவர்கள் இருவரும் சுட முயன்றபோதே

04

# இலங்கையில் 58 பாதாளக் குழுக்கள்; 1400 பேர் வரை அங்கம் வகிக்கின்றனர்

## இவ்வருடம் இதுவரை 17 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள்

இலங்கையில் 2025 ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் 17 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையில் 58 பாதாளக் குழுக்கள் செயல்வடுவது கண்டறியப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் இன்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே பதில் பொலிஸ்மா அதிபர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளுக்கு

02



# யாழ். வரும் வெளிநாட்டவர்களை இலக்கு வைத்து பண மோசடியில் ஈடுபட்டு வந்த பெண் சிக்கினார்!

யாழ். வரும் வெளிநாட்டவர்களை இலக்கு வைத்து பண மோசடியில் ஈடுபட்டு வந்த பெண் சிக்கினார்!

போலி மருத்துவ அறிக்கைகளைக் காண்பித்து வெளிநாட்டில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ளவர்களை இலக்கு வைத்த பண மோசடியில் ஈடுபட்டு வந்த பெண்ணொருவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மோசடியாகப் பெற்றிருந்த 50 ஆயிரம் ரூபா பணத்தையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நகர் பகுதி மற்றும் புறநகர் பகுதிகளான திருநெல்வேலி, கல்வியங்காடு, கோப்பாய், கொக்குவில் உட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலத்தில் வெளிநாடுகளில் இருந்து வந்திருக்கும் நபர்களின் வீடுகளை இலக்கு வைத்து சென்ற மேற்படி பெண், தான் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் எனவும், தனக்குச் சத்திர சிகிச்சை செய்ய வேண்டியுள்ளது எனவும் போலியான மருத்துவ அறிக்கைகளைக் காண்பித்து பணம் பெற்று மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளார்.



கடந்த செவ்வாய்க்கிழமை கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள வீடொன்றுக்கு வேகோ மோட்டார் சைக்கிளில் சென்ற பெண், தனக்குச் சத்திர சிகிச்சை மேற்கொள்ள பண உதவி தேவை எனக் கூறி 50 ஆயிரம் ரூபா பணத்தை மோசடியாகப் பெற்றுச் சென்றுள்ளார்.

பணத்தைக் கொடுத்த வெளிநாட்டவர், அது தொடர்பில் தனது உறவினர்களுக்குத் தெரிவித்தபோதே மேற்படி பெண் வெளிநாடுகளில் இருந்து வந்திருந்த வேறு நபர்களிடமும் பணத்தை வாங்கியுள்ளமையை உறவினர்கள் கூறியுள்ளனர்.

அதன்பின்னரே தான் ஏமாற்றப்பட்ட விடயம் வெளிநாட்டில் இருந்து வந்தவருக்குத் தெரியவந்ததை அடுத்து பொலிஸாருக்குப் பெண்ணின் மோட்டார் சைக்கிள் இலக்கம், பெண் தொடர்பான அடையாளங்களைத் தெரிவித்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அந்நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை மேற்படி பெண்ணைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# மானிப்பாயில் வீட்டில் இருந்து ஆண் ஒருவர் சடலமாக மீட்பு!



யாழ்ப்பாணம், மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவாலி பகுதியில் இன்று சனிக்கிழமை ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நவாலி வடக்கு பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

மேற்படி நபர் வீட்டில் சடலமாகக் கிடப்பதைக் கண்ட உறவுகள் மானிப்பாய் பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து சடலம் யாழ். போதனாவைத்தியசாலைக்குக்கொண்டு செல்லப்பட்டு, உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபர் தனது மனைவி அதிக கடன் பெற்றதன் காரணமாக மனவிரக்தியில் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இலங்கையில்...**

கடந்த காலத்தில் அரசியல் ஆதரவு இருந்தது. எனினும், தற்போது தற்போது அரசியல் ஆதரவு இல்லாமல்போயுள்ளது.

நாட்டில் 58 பாதாள உலகக் குழுக்களை நாம் அடையாளம் கண்டுள்ளோம். அந்தக் குழுக்களில் 1400 பேர் வரை உள்ளனர். இந்தக் குழுக்களின் தலைவர்கள் வெளிநாடுகளில் இருந்து செயற்படுகின்றனர்.

2024ஆம் ஆண்டுடில் 75 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும், 18 வாள்வெட்டுச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

2025ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் 17 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள், 5 வாள்வெட்டுச் சம்பவங்கள் என மொத்தம் 22 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன." – என்றார்.

**கொலைக் கலாசாரத்துக்கு...**

என்று அரசிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும் போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

"நாடு முழுவதும் கொலைச் சம்பவங்கள்நடந்துவரும்நிலையில்,கொலைக் கலாசாரம் இருந்து வரும் நிலையில் நாட்டு மக்களினதும் மக்கள் பிரதிநிதிகளினதும் உயிருக்கு பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், சமூகத்தில் அனைவரும் கடும் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். சட்டம் ஒழுங்கு அமைச்சர் இது குறித்து கருத்துத் தெரிவிக்க வேண்டும்.

பிள்ளைகள் மற்றும் ஒட்டு மொத்த சமூகபி பாதுகாப்பை உறுதி செய்யும் முறையான வேலைத்திட்டத்தை முன்வையுங்கள். நீதிபதிகளினதும் சட்டத்தரணிகளினதும் பாதுகாப்பு கூடப் பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும்." – என்றார்.

# இறுதி ஊர்வலத்தில் விபத்து ஒருவர் மரணம்! ஐவர் காயம்!!

## யாழ்ப்பாணத்தில் சோகம்

யாழ்ப்பாணத்தில் இறுதி ஊர் வலத்தில் கலந்துகொண்டவர்கள் மீது வாகனம் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 5 பேர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த சோதிலிங்கம் கஜேந்திரன் (வயது 30) என்பவரே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் பகுதியில் அண்மையில் உயிரிழந்தவரின் இறுதிக்கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்று தகனக் கிரியைக்காகப் பூதவுடலைக் கோப்பாய் - கைதடி வீதியில் உள்ள இந்து மயானத்துக்கு எடுத்துச் சென்றவர்கள் மீது வீதியால் மிக வேகமாக வந்த வாகனம் மோதி தள்ளி விட்டு அவ்விபத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்களை அங்கிருந்தவர்கள் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் ஏனைய ஐவரும் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், தப்பிச் சென்ற வாகனத்தைக் கண்காணிப்பு கமராக்களின் காணொளிகள் அடிப்படையில் தேடி வருகின்றனர்.

### சபையில் தலைவர் பிரபாகரனைச் சாடிய

# ரோஹிதவுக்கு எதிராக அர்ச்சுனா போர்க்கொடி

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் விவசாயிகளை நெருக்கடிக்குள்ளாக்கினார் என்று களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்த கருத்துக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

“பிரபாகரன் ஒரு பயங்கரவாதி என்பதை என்றும் குறிப்பிடுவேன். அவர் இவர்களின் தலைவர் என்று நான் ஒருபோதும் குறிப்பிடவில்லை.” - என்று ரோஹித அபேகுணவர்தன சபையில் உரத்து குறிப்பிட்டார்.

இதன்போது ரோஹித அபேகுணவர்தனவுக்கும், அர்ச்சுனாவுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை வரவு - செலவுத் திட்டம் மீதான நான்காம் நாள் விவாதத்தில் உரையாற்றிய எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன, 2006இல் வேலுப்பிள்ளை பிரபாகரன் மாவிலாற்றை மூடி விவசாயிகளுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியதால் 2009 ஆம் ஆண்டு அவர் இறக்க நேரிட்டது என்று குறிப்பிட்டிருந்தார்.

அதேபோன்று முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ இரசாயன உரத்தைத் தடை செய்து ஒரே இரவில் சேதன உரத்தைப் பயன்படுத்த அறிவித்தார். இதனால் அவரின் ஆட்சியே இல்லாமல் போய் வீட்டுக்குப் போக நேரிட்டது. இதனால் விவசாயிகளுக்கு ஆட்சியாளர்கள் செவிசாய்க்க வேண்டும். விவசாயிகளை பகைத்துக்கொள்ளக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து ஒழுங்குப்பிரச்சினையை முன்வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்



சுனா,

“நான் வடக்கு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன். இந்த இடத்தில் சில விடயங்களைத் தெளிவுபடுத்த வேண்டும்.

இவர் (ரோஹித அபேகுணவர்னவை நோக்கி) எங்களின் தலைவர் பிரபாகரன் தொடர்பில் கதைத்தார். 2009இல் அவரை இல்லாமல் செய்ததாகவும் கூறினார். அப்படியிருக்கையில் ஏன் இன்று வரையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவில்லை என்பதனைக் கூறுங்கள்.” - என்றார்.

இதன்போது எழுந்த அமைச்சர் வசந்த சமரசிங்க,

“ஒழுங்குப் பிரச்சினை என்றால் என்ன என்று தெரியாமல் தேவையில்லாத விவாதத்தை இவர் (அர்ச்சுனா) உருவாக்குகின்றார். ஆகவே, இதற்கு இடமளிக்க வேண்டாம்.” - என்று குறிப்பிட்டார்.

இதன்போது சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் ரிஷ்வி சாலி, இது ஒழுங்குப் பிரச்சினை அல்லவென அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன,

“நான் ஒருபோதும் இவர்களின் தலைவர் என்று பிரபாகரனைக் கூறவில்லை.

அவரைத் தலைவராகக் கூற வேண்டிய அவசியம் எனக்கில்லை. அவர் ஒரு பயங்கரவாதி. அன்றும், இன்றும் என்றும் அவர் பயங்கரவாதி. புலி, புலி.” - என்று உரத்துக் குறிப்பிட்டார்.

இதன்போது மீண்டும் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப அர்ச்சுனா எம்.பி. முயன்ற போதும், அதற்கு இடமளிக்காத பிரதி சபாநாயகர், மதிய போசனத்துக்காகச் சபையை 12.30 மணி முதல் ஒரு மணித்தியாலத்துக்கு ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

பிற்பகல் 1.30 மணிக்கு மீண்டும் சபை கூடியபோது, மீண்டும் தனது ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி உரையாற்ற அர்ச்சுனா எம்.பி. முயற்சித்தார்.

இவ்வேளையில் சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி குழுக்களின் தலைவர் ஹேமாலி வீரசேகர, ”அதில் ஒழுங்குப் பிரச்சினை இல்லை. அது நிலையியல் கட்டளையை மீறுவதாகும்.” - என்றார்.

எனினும் தொடர்ந்தும் தனக்குப் பேச அனுமதி கேட்ட அர்ச்சுனா, ”நானொரு கட்சித் தலைவர், எனக்கு ஒரு நிமிடத்தைத் தாருங்கள், மற்றையவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் நீங்கள் தமிழ்ச் சிறுபான்மையினர் கேட்கும் போது நிலையியல் கட்டளையைப் பார்க்கின்றீர்கள். ஏன் இந்த நாட்டில் இவ்வாறு நடக்கின்றது?” - என்று கேள்வி எழுப்பினார். ஆனால் அர்ச்சுனா எம்.பிக்குத் தொடர்ந்தும் பேசுவதற்குப் பிரதிக் குழுக்களின் தலைவர் அனுமதி வழங்கவில்லை.



# தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளிட்ட 15 அமைப்புக்களுக்குத் தடை விதிப்பு

## விசேட வர்த்தமானி வெளியீடு

தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளிட்ட 15 அமைப்புக்களைத் தடை செய்து விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் எச்.எஸ். துய்யகொந்தவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட செயற்பாடுகளுக்கு நிதியளித்த குற்றச்சாட்டின் பேரில் குறித்த அமைப்புக்கள் தடை செய்யப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த அமைப்புக்களின் நிதி மற்றும் பொருளாதாரச் சொத்துக்களும் முடக்கப்பட்டுள்ளன.

மேலும், பயங்கரவாதத்துடன் தொடர்புடைய 222 நபர்களின் பெயர் பட்டியலையும் அரசு மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

# "கனேமுல்ல சஞ்சீவ" சூட்டுப் படுகொலை சம்பவம்: பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட மேலும் இருவர் கைது

## மார்ச் 7 ஆம் திகதி வரை விளக்கமறியல்

கொழும்பு, புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்துக்குள் கடந்த புதன்கிழமை பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "கனேமுல்ல சஞ்சீவ" என்பவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட மேலும் இருவர் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துருகிரிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

மற்றைய சந்தேகநபர், நீதிமன்றத்துக்குள் சட்டத்தரணி வேடத்தில் சென்ற பிரதான சந்தேகநபரின் போக்குவரத்துக்கு உதவி செய்த சாரதி ஒருவர் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் இன்று சனிக்கிழமை ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவர்களை எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "கனேமுல்ல சஞ்சீவ" சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் இதுவரை 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**துப்பாக்கிதாரிகள்...**

பொலிஸார் பதில் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

பிலியந்தலையைச் சேர்ந்த அருண என்ற 32 வயதான நபரும், மட்டக்குளி – மோதரையைச் சேர்ந்த விஜயகுமார் என்ற நபரும் இவ்வாறு உயிழந்துள்ளனர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் ஒரு பொலிஸ் அதிகாரியும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறுகையில்,

"நேற்று வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் கொட்டாஞ்சேனையில் உள்ள ஒரு மொபைல் போன் கடைக்குள் அந்தக் கடையின் உரிமையாளர் சசிக்குமார் என்ற 38 வயது நபர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

துப்பாக்கிச்சூடு மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்களால் மேற்கொள்ளப்பட்டது. சுடப்பட்ட நபர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்ட இரண்டு குற்றவாளிகளும் மோட்டார் சைக்கிளில் தப்பிச் செல்லும்போது பொலிஸாரால் துரத்திச் சென்று கைது செய்யப்பட்டனர்.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் துப்பாக்கியும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

நேற்று இரவு தாமதமாக சந்தேக நபர்கள் மறைத்து வைத்திருந்த ஏனைய ஆயுதங்கள் குறித்து பொலிஸாருக்குத் தகவல் அளித்ததை அடுத்து, அவர்கள் ஆயுதங்களை மறைத்து வைத்த பகுதிக்குப் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு, சந்தேகநபர்கள் பொலிஸ் அதிகாரிகளின் துப்பாக்கிகளைப் பறித்து அவர்களைச் சுட முயன்றனர்.

பொலிஸ் அதிகாரிகள் நடத்திய தற்காப்பு துப்பாக்கிச்சூட்டில் இரண்டு சந்தேகநபர்களும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்தார். அவர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்." – என்றார்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

CLICK HERE VIDEO




**ஊர் கோழி**




**ஊர் ஆட்டிறைச்சி**




**விளைமீன்**




**உளுந்து**




**இறால்**




**சுறா பாரை**

## Gunaam's Super Market இந்த வாரம் அள்ளித்தரும் Super Deal.

| | | | |
|---|---|---|---|
| 400g புளி | - $2.49 | முழு King fish | - $5.991b |
| Woadiya Tin fish 3 For | - $10.00 | சல்மன் fish | - $7.991b |
| பிள்ளையார் நல்லெண்ணெய் | - $9.99 | See Bream Fish | - $7.991b |
| 41b gunaam's உளுந்து | - $4.99 | சுராப் பாரை | - $7.991b |
| 41b மைசூர் பருப்பு | - $4.99 | நெத்தலி மீன் | - $7.991b |
| Milo Dring 5 For | - $5.99 | மஞ்சல் பாரை | - $5.991b |
| Ceycan செத்தல்மிளகாய் 400g | - $4.99 | இறால் | - $4.991b |
| Red Ruby Curry Powder - $12.99 | | ஊர் ஆட்டிறைச்சி | - $9.991b |
| Brown Bettry Cocount Powder 1 kg | - $8.99 | கோழிக் கால் | - $1.991b |
| 10 cup rice Cooker | - $49.99 | காட்டுப் பன்றி | - $5.991b |
| அப்பச்சட்டி | - $20.00 | Ceylon பாரை | - $8.991b |
| Big கல் உரல் | - $39.99 | Ceylon கடல் விறால் | - $8.991b |
| Big கருங்கல் அம்மி | - $199.00 | Big ஊர்க் கோழி | - $8.99 |
| Maharaja அரிசி மா | - $8.99 | கருந்திரளி | - $4.99 1b |
| Maharaja Curry Powder | - $12.99 | ஓரா Fish | - $7.99 1b |
| Ceylon விளைமீன் | - $7.991b | கும்பிளா Fish | - $7.99 1b |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மின்சார அதிர்ச்சி!

'வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை' என்று ஒரு பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு.

கடும் விமர்சனத்திற்கு உள்ளாகி வரும் வலு, சக்தி அமைச்சின் நிர்வாகம் இந்த வகையில்தான் இருக்கின்றது போலும்.

மின்விநியோக நடவடிக்கைகள், மின்சார கட்டண நிர்ணயங்கள், மின் கொள்முதல் செயற்பாடுகள் போன்றவை தொடர்பில் ஊழல், மோசடி, முறைகேடுகள் தாராளமாக நீடிப்பதாகத் தொடர்ந்தும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் நாடு முழுவதும் ஏற்பட்ட ஐந்து மணி நேர மின்வெட்டுத் தொடர்பில் இலங்கை மின்சார சபையின் நடவடிக்கைகள் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகின.

இப்போது இன்னொரு பிரச்சினை குறித்துப் பேசப்படுகிறது.

அண்மை காலமாக நாட்டில் சூரிய ஒளி, அதன் வெப்பம், அதனால் ஏற்படும் பாதிப்பு ஆகியவை குறித்து செய்திகள் தொடர்ந்து வெளியாகி வருகின்றன. சூரிய வெப்ப அதிகரிப்பால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து மக்களுக்கு எச்சரிக்கப்படுகின்றது. ஆயினும் சூரிய ஒளியின் இந்தப் பிரகாசம் வேறு வழியில் நன்மை தருவதாகவும் இருக்கின்றது.

நாட்டில் சூரிய ஒளியின் அளவு அதிகரித்து இருப்பதால் நாடு முழுவதிலும் பரவலாக உள்ள சூரிய ஆற்றலின் உற்பத்தித்திறன் அதிகரித்துள்ளது. இந்த நிலைமை மேலும் தொடர்ந்தால் தேசிய மின் கட்டமைப்புக்கு வந்து சேரக்கூடிய மின்சாரத்தின் அளவு கணிசமான அளவு உயரும். ஆயினும், அதனை ஆதரித்து, உள்வாங்கி, ஒழுங்குபடுத்துவது கடினமாக இருக்கும் என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை தற்போது வறண்ட நிலைமைகளை எதிர்கொண்டுள்ளது. எதிர்வரும் மாதங்களில் அதிகரிக்கும் வெப்பநிலையானது சூரிய மின் கலங்களினால் வழங்கப்படும் மின் சக்தியை அதிகரிப்பதால், அது ஆற்றல் மட்டங்களைப் பாதிக்கும்.

இது மிகவும் செலவு குறைந்த மின் உற்பத்தியாக இருக்கலாம். எனினும் தேசிய மின்வட்டத்தின் சுமையை தொடர்ந்து அதிகரித்தால், அது செயலிழக்கும் அபாயத்திற்கு வழி வகுக்கும் என்று இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தம்மிகே விமலரத்ன தெரிவித்தார்.

சாதாரண சூழ்நிலையில், நாட்டில் 1,000 மெகாவாட்டாக இருக்கும் சூரிய சக்தி மின் உற்பத்தி ஆற்றல் தற்போதைய பிரகாசமான சூரிய வெளிச்சம் காரணமாக 1,400 முதல் 1,500 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. இது மேலும் உயர்ந்தால் நாட்டின் மின்சுற்று செயலிழக்கும் ஆபத்து உள்ளதாக அவர் எச்சரிக்கின்றார்.

"எங்களிடம் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் உள்ளன. ஆனால் அவற்றை நிர்வகிப்பதற்கான சரியான வழிமுறைகள் இல்லை. எனவே புதுப்பிக்கத்தக்க ஆற்றலைக் கண்காணிப்பதற்கும் கையாளுவதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கண்காணிப்பு மையத்தை நாங்கள் நிறுவுகிறோம்." என்று தம்மிகே கூறினார்.

சூரிய சக்தி மின் உற்பத்தி கலங்களைப் பொதுமக்கள் தங்கள் வீடுகளில் பொருத்தி, அவற்றின் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தை தேசிய மின் இணைப்புக்கு விநியோகிப்பது தொடர்பான அனுமதிகளை வழங்குவதற்கான இலங்கை மின்சார சபையின் நடவடிக்கைகளில் ஊழல், முறைகேடுகள் தாராளமாக உள்ளன என்று குற்றச்சாட்டப்படும் பின்னணியில், இப்போது சூரிய மின் உற்பத்தி மூலம் கிடைக்கும் அபரிமிதமான - விலை குறைந்த - மின்சாரத்தைத் தேசிய மின் இணைப்பில் இணைப்பதனால் புதிய சிக்கல்கள் வரும் என்று புது பிரச்சினை கிளப்பப்படுகின்றது.

மின்சார சபை நிர்வாகம் 'வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை' என்பது போலத்தான் இருக்கின்றது...!



# திருக்கோவில் தாண்டியடி மாணவருக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக 2005 - 2006 ஆம் வருட முகாமைத்துவ பீட மாணவர்களின் பங்களிப்பில் கல்முனை திருக்கோவில் தாண்டியடி விக்னேஸ்வரா மகா வித்தியால பாடசாலையின் மாணவர்களுக்கு பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

பாடசாலையின் கற்றல் செயற்பாடுகளுக்கு அவசியமான ஒலி அமைப்பு சாதன வசதியும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக 2005 - 2006 ஆம் வருட முகாமைத்துவ பீட மாணவர்களான கிருபானந்த், தனுஷாந்த்,கேதீஸ், நிதர்ஷன், வினோத் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.











# தொற்றா நோய் தொடர்பான விசேட செயலமர்வு

(நூருல் ஹுதா உமர்)

தொற்றா நோய்களைத் தடுக்கும் நோக்கில் ஆரோக்கியமான உணவு முறை குறித்து தாதியர்களை தெளிவூட்டும் பயிற்சி செயலமர்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற செயலமர்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிராந்திய பணிப்பாளர் மற்றும் பிராந்திய தொற்றா நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் இர்ஷாத் ஆகியோர் விளக்கமளித்தனர். கல்முனை பிராந்தியத்தில் உள்ள சகல வைத்தியசாலைகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட தாதியர்கள் இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர்.



# விவசாயிகள், மீனவர் அபிவிருத்தி தொடர்பில் வரவு – செலவுத் திட்டத்தின் பங்களிப்பு என்ன?

## கேள்வி எழுப்பினார் அஷ்ரப் தாஹிர் எம்.பி.



(அபு அலா, எஸ்.எம்.முபீன்)

கிழக்கு மாகாணம் கடற்தொழில் மற்றும் நெல் உற்பத்திகளை பிரதானமானதாகக் கொண்டு காணப்படுவது மட்டுமல்லாமல், இந்த நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் அம்பாறை மாவட்டம் நான்கில் ஒரு பங்கு உற்பத்தியைத் தேசிய உற்பத்திக்காக வழங்கும் பிரதேசமாக இருந்து வருகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் உரையாற்றுகையில்,

விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுவரும் சேனநாயக்க சமுத்திரத்தின் நீர்ப்பாசன முறைமையை விஸ்த்தரித்து பொத்துவில் பிரதேசங்களில் உள்ள சிறிய குளங்களை புனர்நிர்மாணம் செய்வதன் மூலம் இரண்டு போக வேளாண்மை செய்கையை நடைமுறைப்படுத்த இந்த வரவு – செலவு திட்ட முன்மொழிவில் ஏதாவது முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளதா?.

கடந்த வருடம் பல தடவைகள் குறித்த நீர்த்தேக்கத்தின் மேலதிக நீர் வெளியேற்றத்தின் காரணமாக விவசாயிகள் பாதிப்படைந்திருக்கிறார்கள். குறிப்பாகப் பாணமை தொடக்கம் புல்மோட்டை வரையான சுமார் 10 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட கிழக்கு மாகாணம், தேசிய வருமானத்துக்குப் பாரியளவிலான பங்களிப்பை வழங்கக் கூடிய பிரதேசமாக மாற்றியமைக்கப்படல் வேண்டும் .

குறிப்பாக மீனவர்களை மையப்படுத்திய திட்டங்களை அறிமுகப்படுத்தி இப்பிரதேசங்களில் காணப்படும் துறை முகங்களை முறையான பயன்பாட்டிற்கு கொண்டுவருவதுடன் நன்நீர் மீன் வளர்ப்பு திட்டங்களுக்கான ஊக்குவிப்புக்களையும் மேற்கொள்வதற்கான ஒதுக்கீடுகள் இந்த வரவு – செலவு திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதா?.

விவசாய பயிர்ச் செய்கை நிலங்கள் வனவிலங்கு, வன இலாகா, தொல்பொருள் மற்றும் பாதுகாப்பு தளங்கள் போன்ற வாற்றுக்காக அரசு கையகப்படுத்தியுள்ளமை விவசாய உற்பத்தியில் வீழ்ச்சி நிலையை ஏற்படுத்தியுள்ளது. அவற்றை சீர் செய்வதற்கான திட்டங்களை அரசு வகுக்க வேண்டும்.

கடந்தகால ஆட்சியாளர்களால் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வருகின்ற பொத்துவில் பிரதேச மக்களின் குடி தண்ணீர் பிரச்சினை மற்றும் நீர்ப்பாசனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமாக ஹெட ஓயா திட்டம் மக்களுக்கு மிகுந்த பயனைப் வழங்க கூடியதாக காணப்படுகிறது. அந்தத் திட்டத்தை அரசு விரைவாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த வரவு – செலவுத் திட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு கிழக்கு மாகாணத்தின் தேவைகளை நிவர்த்திக்கும் வகையில் அதிக ஒதுக்கீடுகளை அரசு செய்ய வேண்டும்.– என்றார்.

# வர்த்தகத்துறை, ஊடகத்துறை மாத்திரமல்ல சமூக சேவையிலும் தடம் பதித்தவர் சாமி ஐயா!

## விவேகப் பார்வை ஊடக ஒன்றியத்தின் தலைவர் முபீன் அனுதாபம்!

(அபு அலா)





தொழில்துறையிலும், பத்திரிகைத் துறையிலும் சிறந்த முன்னோடியாக இருந்த தொழிலதிபரும் 'தினக்குரல்' நாளிதழின் நிறுவுநருமான எஸ்.பி.சாமியின் மறைவு அவருடைய குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், 'தினக்குரல்' குழுவுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருகோணமலை மாவட்ட கோபாலபுரம் விவேகப் பார்வை ஊடக ஒன்றியத்தின் தலைவர் எஸ்.எம்.முபீன் தனது அனுதாபச் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தெரிவித்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அரசியல் பிரமுகர்களோடும் ஊடகவியலாளர்களோடும் வர்த்தக சமூகத்தவர்களோடும் எவ்வித பாரபட்சமுமின்றி சம நிலையைப் பேணிய பெருந்தகையாகவே மறைந்த எஸ்.பி.சாமி ஐயாவைப் பார்க்கின்றோம்.

அவரின் அயராத முயற்சியின் பயனாக, வர்த்தகத்துறை மற்றும் ஊடகத்துறை மாத்திரமல்ல, சமூக, சமய சேவைகளிலும் தனது முத்திரையைப் பதித்தவர்.

தலைநகர் கொழும்பிலும் வடக்கிலும் பல்வேறு சமூக அமைப்புக்களில் தலைவராக நீண்ட காலம் பணியாற்றிய அவர் தனது செல்வத்தை நலிவுற்ற மக்களின் நலன்களுக்காக தாராளமாகத் கொடுத்து உதவினார்.

சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்னர் எஸ்.பி.சாமி ஆரம்பித்த 'தினக்குரல்' பத்திரிகை இன்று இலங்கையின் முன்னணி தேசிய தமிழ்ப் பத்திரிகைகளில் ஒன்றாக விளங்குகின்றது.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் விவேக ஊடக ஒன்றியம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.– என்றுள்ளது.



# பள்ளிவாசல்களுக்கு பேரீச்சம்பழம் வழங்கிய ஹிஸ்புல்லாஹ் எம்.பி.

**(அபு அலா, மட்டு.துஷாரா, எஸ். சினீஸ் கான்)**

ஸ்ரீ லங்கா ஹிரா பௌண்டேஷன் ஏற்பாட்டில் எதிர் வரும் புனித நோன்பை முன்னிட்டு காத்தான்குடி மற்றும் அதனை அண்டிய பிரதேச பள்ளிவாசல்களுக்கு ஈத்தம்பழம் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு புதிய காத்தான்குடி பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இதன்போது, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பள்ளிவாசல்களுக்கான பேரீச்சம் பழங்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில், காத்தான்குடி பிரதேச செயலாளர் நிஹாரா, காத்தான்குடி நகர சபையின் முன்னாள் தவிசாளர் அஸ்பர், ஸ்ரீலங்கா ஹிரா பவுண்டேஷன் செயலாளர் அஷ்ஷெய்க் மும்தாஸ் மதனி காத்தான்குடி ஜமீதுல் உலாமாவின் செயலாளர் ஜவாஹிர் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், காத்தான்குடி பள்ளிவாயல்கள் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய பள்ளிவாயல்களின் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.







# திருக்கேதீஸ்வரர் ஆலய மகா சிவராத்திரி; அரச அதிபர் தலைமையில் கலந்தாய்வு!

## பல்வேறு தேவைகள் தொடர்பிலும் விரிவாக ஆய்வு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு முன்னாயத்த கலந்துரையாடல் திருக்கேதீஸ்வர ஆலய சம்பந்தர் மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் திருக் கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையின் தலைவர் ராம கிருஷ்ணன் கலந்து கொண்டார்.

மேலும் பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச தனியார் போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகள், பொலிஸார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது எதிர்வரும் 26 ஆம் திகதி இடம்பெறவுள்ள மகா சிவராத்திரிக்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கடந்த வருடங்களை போன்று இம்முறையும் லட்சக் கணக்கான மக்கள் கலந்து கொள்ள உள்ள நிலையில் முன்னெடுக்கப்பட வேண்டிய முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

குறிப்பாக போக்குவரத்து ஒழுங்குகள், சுகாதாரம், மின்சாரம், நீர் விநியோகம், உணவு, பாதுகாப்பு, மருத்துவ வசதிகள் உள்ளடங்களாக முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

# சவுதி அரேபியாவின் ஸ்தாபகர் தினம்!



(எம்.எல்.சரிப்டீன்)

சவுதி அரேபியாவின் ஸ்தாபகர் தினம் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது.

சவுதி அரேபியா நாட்டின் நாகரீகம், கலாச்சாரம் மற்றும் வரலாற்றை அறிந்து கொள்ளும் நாளாக ஆக்குவதற்கு இரண்டு புனித ஸ்தலங்களின் பாதுகாவலரான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல்சவுத் உத்தரவை பிறப்பித்திருந்தார். மூன்று சவுதி மாநிலங்கள் தனித்தனியாக நிறுவப்பட்டு பின்னர் ஒருங்கிணைக்கப்பட்ட நாளை இது குறிக்கிறது.

இமாம் முகமது பின் சவுத் திரியாவை தலை நகராகக் கொண்டு சவுதி இராஜ்ஜியத்தை 1727ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி நிறுவினார். இமாம் முகம்மது பின் சவுத் திரியாவை பொறுப்பேற்ற போது அங்கு ஒற்றுமையை நிலை நாட்டவும் அதனை சுற்றியுள்ள நகரங்களையும் பழங்குடியினர்களின் ஸ்திரத் தன்மையைப் பாதுகாக்கவும் ஹஜ் மற்றும் வர்த்தக வழிகளை பாதுகாக்கவும் பங்களிப்புச் செய்தார். மாநிலத்தின் பொருளாதார நிலைமைகளை ஒழுங்கமைப்பதும் கட்டுமானங்களை விரிவுபடுத்துவதும் அவரது பணியாக இருந்தது.

பின்னர் ரியாதை தலைநகராகக் கொண்டு இரண்டாவது சவுதி ராஜ்யத்தை கிறிஸ்துக்கு பின் 1824 இல் உருவாக்கினார். இதனைத் தொடர்ந்து மன்னர் அப்துல் அஸீஸ் பின் அப்துல் ரஹ்மான், மூன்றாவது சவூதி அரசை கி.பி. 1902 இல் ரியாதை தலைநகராகக் கொண்டு நிறுவியதோடு, மூன்று மாநிலங்களையும் ஒருங்கிணைத்து 1932 ஆம் ஆண்டு சவுதி அரேபியா ராஜ்ஜியம் என்ற தனி நாட்டை உருவாக்கி னார்.

சவுதி அரசின் உறுதியான வேர்களின் பெருமை, குடிமக்களுக்கும் அவர்களின் தலைவர்களுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பின் பெருமை, சவுதி அரசு ஏற்படுத்திய ஒற்றுமை ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பின் பெருமை, சவுதி அரசின் உறுதிப்பாடு மற்றும் எதிரிகளுக்கு எதிராக அதன் பாதுகாப்பில் பெருமை, சவுதி அரசின் தொடர்ச்சி மற்றும் அதன் வேர்கள் மற்றும் தலைவர்களின் வலிமையை மீட்டெடுப்பதில் பெருமை, மன்னர் அப்துல் அஸீஸ் பின் அப்துல் ரஹ்மான் அல் பைசல் அல் சவுத் அவர்களால் நிறுவப்பட்ட சவுதி அரேபியாவின் தேசிய ஒற்றுமையின் பெருமை, கட்டுமானம் மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவதில் மன்னர் அப்துல் அஸீஸ் ின் மகன்களான மன்னர்களின் சாதனைகளில் பெருமை, இமாம் முஹம்மது பின் சவுத்தின் முதல் சவுதி அரசின் நிறுவனர் ஆகியேரின் பெருமைகள் இந்த ஸ்தாபகர் தினத்தல் நினைவு கூறப்படுகின்றன.

# மருத்துவ மற்றும் விவசாய பீடங்களை தென்கிழக்கு பல்கலையில் ஆரம்பியுங்கள்

### அஷ்ரப் தாஹிர் எம்.பி. அரசிடம் வலியுறுத்து

(அபு அலா, எஸ்.எம்.முபீன்)

ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் மிக நீண்டநாள் தேவையாகவும், கோரிக்கையாகவும் இருந்து வருகின்ற மருத்துவ பீட மொன்றை அமைப்பதற்காக ஒவ்வொரு அரசிடமும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்திருந்தாலும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கபடவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் தெரிவித்தார்.



கடந்த அரசுகளைப் போன்று இந்த அரசும் இருக்கக் கூடாது. இந்த விடயத்தில் கூடுதல் கவனமெடுத்துச் செயற்பட வேண்டும்.

இந்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்ட வாசிப்பின் மீதான விவாதங்களின் போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகம் அமைந்திருக்கும்பிரதேசம் விவசாயத்துக்குப் பெயர்போன பிரதேசமாக காணப்படுவதால் இப்பல்கலைக்கழகத்துக்கு விவசாய பீடமொன்றை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த வரவு – செலவுத் திட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு கிழக்கு மாகாணத்தின் தேவைகளை நிவர்த்திக்கும் வகையில் அதிக ஒதுக்கீடுகளை செய்ய வேண்டும்.– என்று மேலும் தெரிவித்தார்.




# மன்னாரில் ஆடைக் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்!

(ஜோசப் நயன்)

மன்னாரில் இயங்கி வரும் லட்சுமி கரங்கள் தொண்டு அமைப்பால் நடத்தப்பட்டு வந்த தையல் பயிற்சி நிலையத்தில் பயிற்சிகளை நிறைவு செய்த மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் ஆடைக் கண்காட்சியும் நேற்று வெள்ளிக்கிழமை (21) மாலை நடைபெற்றன.

அடம்பன் கிராமத்தில் அமைந்துள்ள தையல் பயிற்சி நிலையத்தில் இது நடைபெற்றது.

லட்சுமி கரங்கள் தொண்டு அமைப்பின் பணிப்பாளர் சக்தி ராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலாளர் க.கனகேஸ்வரன் , சிறப்பு விருந்தினராக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் க.டெ.அரவிந்த ராஜ் ஆகியோர் கலந்து கொண்டார்.

லட்சுமி கரங்கள் தொண்டு அமைப்பால் நடந்தப்பட்ட தையல் பயிற்சியைப் பூர்த்தி செய்த மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட மாணவிகளுக்குத் தையல் இயந்திரமும் வழங்கி வைக்கப்பட்டது .

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், லட்சுமி கரங்கள் தொண்டு அமைப்பின் பணியாளர்களின் சேவையை பாராட்டி மதிப்பளிக்கப்பட்டனர்.

அத்துடன் நிகழ்வுக்கு விருந்தினர்களாக வருகை தந்த அதிதிகளுக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிராம சேவகர், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.







# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பல்துறைசார் சர்வதேச ஆய்வரங்கு!

(நூருல் ஹுதா உமர்)

‘சமகால சமூகப் பிரச்சினைகள் – ஒரு உலகளாவிய பார்வை’ என்ற தொனிப்பொருளிலான ஒரு வார கால பல்துறைசார் சர்வதேச ஆய்வரங்கின் (கலப்பின முறை) முதல் அமர்வு, தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழில் நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் நேற்று (21) கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் தலைமையில் இடம்பெற்றது.

ஆய்வரங்கின் முதல் அமர்வுக்கு வருகை தந்திருந்த வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஆய்வாளர்களை கலை கலாச்சார பீடத்தின் சமூகவியல் துறையின் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். எம். ஐயூப் வரவேற்று உரை யாற்றினார்.

பல்துறைசார் சர்வதேச மாநாட்டின் இலங்கை அமர்வின் பிரதம அதிதியாக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் கலந்து கொண்டு உரை யாற்றினார். மாநாட்டின் பிரதான பேச்சாளர்களாக இந்தியாவின் தமிழ் நாடு, பாரதி பெண்கள் கல்லூரியின் புவியல்துறை இணைப் பேராசிரியர் சாந்திதேவி மற்றும் இந்தியாவின் மும்பாய் நிர்மலா நிகேதன், சர்வதேச சமூகப் சேவை கல்லூரியின் ஆய்வு மற்றும் அபிவிருத்தி இணைப்பாளர் கலாநிதி பெனட் ராஜதுரை ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

மாநாட்டின் கட்டமைப்பு தொடர் பில் இந்தியாவின் தமிழ்நாடு, மெட்ராஸ் பல்கலைக்கழகத்தின் புவியல்துறையின் முன்னாள்பேராசிரியர் தி. வசந்தகுமாரன் உரையாற்றினார். பின்னர் நிகழ்வுக்கு தலைமைவகித்த தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம். எம். பாஸில் தலைமையுரையாற்றி னார்.

இலங்கையிலும் இந்தியாவிலும் இடம்பெறவுள்ள குறித்த ஆய் வரங்குக்கு 150 இற்கு மேற்பட்ட கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அதில் 109 கட்டுரைகள், நிகழ்வில் சமர்ப்பணத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. நிகழ்வின்போது ஆய்வரங்கில் முன்வைக்கப்பட்ட கட்டுரைகளின் ஆய்வுச் சுருக்கங்கள் அடங்கிய புத்தகமும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாச்சார பீடத்தின் புவியல்துறையின் துறைத் தலைவரும் ஆய்வரங்கில் இணைப்பாளருமான சிரேஷ்ட விரிவுரையாளர் கே. நிஜாமிர் நன்றியுரையாற்றினார்.

நிகழ்வில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழி பீட பீடாதிபதி அஷ்செய்க் எம்.எச்.ஏ. முனாஸ், பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், கட்டுரைகளைச் சமர்ப்பித்த உள்நாட்டு வெளிநாட்டுக் கட்டுரையாளர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வரங்கின் தொடர் நிகழ்வு, எதிர்வரும் 24 ஆம் திகதி சென்னையில் இடம்பெறவுள்ளது. இந்தத் தொடர் ஆய்வரங்கின் வள வாளர்களாக தென்கிழக்கு பல் கலைக்கழகத்திலிருந்து பதில் உப வேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத், புவியல்துறையின் தவிசு பேராசிரியரும் மாநாட்டின் ஏற்பாட்டாளர்களில் ஒருவ ருமான எம்.ஐ.எம். கலீல் மற்றும் கலை கலாச்சார பீடத்தின் புவியல் துறையின் துறைத்தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர் கே. நிஜாமிர் ஆகியோர் செல்லவுள்ளனர்.







# கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியாவில் பாடசாலை உட்கட்டமைப்பு விருத்தி!

**(கி.வசந்தன்)**

அரசளின் க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் வவுனியாவிலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக வவுனியா தெற்கு வலயத்துக்கு உட்பட்ட அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் படையினரின் பங்கேற்புடன் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டம் பாடசாலையின் அதிபர் எம்.எம்.அன்பஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, வவுனியா பம்பைமடு பகுதியில் இருந்து வருகை தந்த இராணுவத்தினர், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் இணைந்து பாடசாலையின் சூழல், குடிநீர் விநி யோகம், மலசல கூடம், மைதானம் என்பவற்றை சுத்தம் செய்து திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன. பாடசாலையில் அபாயமாக இருந்த மரங்களும் அகற்றப்பட்டன.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், இந்த மாத ஆரம்பத்தில் பாடசாலைக்கு விஜயம் செய்து பார்வையிட்ட பின் னர், அவர் விடுத்த பணிப்புரைக்கு அமைவாகவே கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் இப் பாடசாலையில் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப் பித்தக்கது.



# உடப்பு சின்னக்கொலனி கருமுத்துமாரியம்மன் ஆலயத்தில் சிவராத்திரி தின விசேட பூசைகள்

**(க.மகாதேவன், உடப்பு)**

உடப்பு சின்னக்கொலனி கிராமத்தில் அமைந்துள்ள தாழையடி ஸ்ரீ கருமுத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நான்கு நாள்கள் விஷேட பூஜை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அதன்படி 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விநாயகர் வழிபாடு இடம்பெற்று, பக்தர்களின் கரங்களால் அம்பாளுக்கு மஞ்சள் நீர் கொண்டு அபிஷேகம் செய்யப்படும்.

அதனைத் தொடர்ந்து விஷேட பூஜைகள் இடம்பெற்று, அம்பாள் வீதிவலம் வருவார்.

26 புதன்கிழமை 108 சங்குகளுடன் சங்காபிஷேகம் இடம்பெற்று, பகல் அன்னதானமும், மாலை 7 மணிக்குச் சமுத்திரத்தில் “தெப்போற்சவமும் நடைபெறும். நான்கு ஜாமப் பூஜைகளும் நடைபெறும்.

27 ஆம் திகதி திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சமுத்திரத்தில் தீர்த்தோற்சவம் இடம்பெறும். மாலை 6 மணிக்கு ஆலய முன்றிலில் பக்தர்களால் பொங்கல் நடத்தப்படும்.

தொடர்ந்து பெண்களால் முளைக்கொட்டல், அம்பாளின் திருவூஞ்சல், பூஜைகள் இடம்பெறும்.

28 திகதி மாலை வைரவர் பூஜை இடம்பெற்று நிகழ்ச்சிகள் நிறைவு பெறும். பூஜை நிகழ்வுகளைக் கிரியா கிரம ஜோதி தேசமான்ய சிவஸ்ரீ வெங்கட சுந்தர ராம குருக்கள், சர்வசாதகம் டிவான்சர்மா, உதவிக் குருக்கள் பிரம்மஸ்ரீ சிவநேச சர்மா ஆகியோர் நடத்தி வைப்பர்.

# மட்டக்களப்பில் பஸ் சாரதி, நடத்துநரை தாக்கிய இருவர் பொலிஸாரால் கைது!

(கனகராசா சரவணன்)

இலங்கை போக்குவரத்து பஸ் ஒன்றில் பயணித்த யுவதி ஒருவரை அந்த பஸ் சாரதி மற்றும் நடத்துநர் கேலி செய்தனர் என்று பஸ்ஸை நிறுத்தி சாரதி நடத்துனர் மீது தாக்குதல் நடத்திய இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (20) இரவு மட்டக்களப்பு புல்லுமலை பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது என்று கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளையில் இருந்து புல்லுமலை ஊடாக மட்டக்களப்புக்கு இடம்பெற்றுவரும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.


இந்த நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் தாக்குதலை மேற்கொண்ட அந்த பகுதியைச் சேர்ந்த இருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையம் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த நிகழ்வாக அருளுரை

தொண்டைமாளாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் நேற்று ஆன்மீக அருளுரையாக "மகாபாரதம்" என்ற தலைப்பில் தொடர் சொற்பொழிவு ஆரம்பமாகியுள்ளது.

இந்தச் சொற்பொழிவை தமிழ் விரிவுரையாளர் இரா.செல்வவடிவேல் நிகழ்த்தி வருகிறார்.

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமி ழன் அமுதகலாசுரபி கலாநிதி செ. மோகனதாஸ் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மாதந்தோறும் மூன்றாவது வெள்ளிக்கிழமை மகாபாரதம் தொடர் சொற்பொழிவு நடைபெறும் என்று சந்நிதியான் ஆச்சிரமம் தெரி வித்துள்ளது.





# கலைத் துறையில் சாதிக்கும் வடக்கு மாகாண இளைஞன்!





(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

வடமாகாணத்தின் இளைஞர்கள் மத்தியில் கலை துறை சார்ந்த ஈர்ப்பு அதிகரித்து வருகிறது. குறிப்பாக அண்மை காலங்களாக ஓவியம், சிற்பம் போன்ற துறைகளில் இளைஞர்களின் பங்களிப்பு, படைப்புக்களும் அதிகரித்து வருகின்றன.

இவ்வாறான பின்னணியில் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மாணவன் கமலரூபன் உருவாக்கியுள்ள கலைப் படைப்புக்கள், அவருடைய கலைத்துறை சார்ந்த செயற்பாடுகள் பலரையும் கவர்ந் துள்ளன.

கமலரூபன் ஒரு கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் அளவுக்கு அதிகமான ஓவியங்கள், சிற்பங்கள், கலைப் படைப்புக்களைத் தனது பல்கலைக் கழகக் கல்விச் செயற்பாடுகளின் போதும், அதே நேரம் தனக்கு கிடைக்கும் ஓய்வு நேரங்கன் போதும் உருவாக்கி மெய் சிலிர்க வைத்துள்ளார்.

கிளிநொச்சியில் மிகவும் சாதாரண பின்னணியை கொண்ட குடும்பத்தில் பிறந்தவர் கமலரூபன். அவரின் இரு அண்ணன்கள் இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டனர். இவ்வாறான சூழ்நிலையில் கல்வியில் சிறந்த பெறுபேற்றை பெற்று யாழ். பல்கலைக்கழகம் சென்றார்.

பல்கலைக்கழகத்தில் பல பாட தெரிவுகள் இருந்த போதிலும் கலை துறையில் பல பாடங்கள் இருந்த போதும் இந்த பாடத்தை தெரிவு செய்து தனது அடையாளத்தை மெல்ல மெல்ல உருவாக்கி வருகிறார் கமலரூபன்.

கமலரூபனின் கலை படைப்புக்கள் ஆழமான கருத்துக்களை நேர்த்தியாக இலகுவாக வெளிப்படுத்த கூடியதாக காணப்படுகின்றன.

அதேநேரம் கலை துறையில் பாரம்பரியமாகப் பின்பற்றும் செயற்பாடுகளுன் மட்டும் நின்றுவிடாது புதிய தொழில் நுட்பங்களையும் தனது படைப்புகளில் உட்புகுத்தி அதிலும் வெற்றி கண்டுள்ளார்.

கமலரூபனால் வரையப்பட்ட சில ஓவியங்கள் செதுக்கப்பட்ட சிலைகள் தத்ரூபமானவையாகக் காணப்படுவதுடன் பிரதி இடக் கூடிய நபரைக் கண்முன் நிறுத்தக் கூடியதாகவும் காணப்படுகின்றது.

இவ்வாறு பல திறமைகளை கொண்ட கமலரூபன் வடமாகாணத்தில் உள்ள கலைப் படப்பாளர்களுக்கு ஒரு குறியீடாகவும் கலைத்துறை மீதான ஆர்வத்தை இளைஞர்கள் மத்தியில் கொண்டு சேர்க்கும் ஒரு ஊடகமாக இருக்கின்றார்.

தற்போது சிறிய அளவிலான தொழில் முயற்சி ஒன்றை கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பித்திருக்கும் கமலரூபன் வாடிக்கையாளர்களுக்கு ஏற்ப தனது கலைப்படைப்புகளை உள்ளூரிலும் வெளிநாடுகளுக்கும் சந்தைப்படுத்தி வருகிறார்.

கலைத்துறை சார்ந்த படைப்புக்களுக்கான சந்தை வாய்ப்புகள் என்பது எமது நாட்டில் குறைவாக காணப்படுகின்றது. பலரது கலைப்படைப்புக்கள் தற்போது வீதிகளிலே காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறான பின்னணியில் கலைத்துறையில் வளர்ந்து வரும் இளைஞர்களுக்கான நவீன சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்கப்படுத்துதல் செயற்பாடுகளை அரசு மற்றும் புலம்பெயர் அமைப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கும் பட்சத்தில் கமலரூபன் போன்ற பல இளைஞர்கள் கலைத் துறையில் சாதிப்பதற்கான பயணங்களில் தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் பயணிப்பார்கள்.




# மாற்றத்துக்கான முன்னோடி மீரா பாரதியின் விழிப்பூட்டல் சைக்கிள் பயணத்துக்கு வரவேற்பு

பருத்தித்துறை முதல் பொத்துவில் வரையான விழிப்பூட்டல் சைக்கிள் பயணத்தின் நிறைவு கட்டத்தை சமூக மாற்றத்துக்கான முன்னோடி செயற்பாட்டாளர் வ. க. செ. மீராபாரதி நெருங்கியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை காரைதீவை வந்தடைந்த இவருக்கு காரைதீவு ஸ்ரீ சிவசக்தி குரு குடைச்சாமி சர்வமத பீடத்தில் வைத்து மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

இயற்கையோடு இணைந்த வாழ் வியலின் அவசியத்தை குறைந்தது பத்து லட்சம் மக்களுக்கு போதிக்கும் வேலை திட்டத்தை முன்னெடுத்து வரும் விழிப்பூட்டல் செயற்பாட்டாளரும், சாதனை மாணவியுமான சம்மாந் துறையூர் மின்மினி மின்ஹா நிகழ்வுக்கு தலைமை தாங்கினார்.

சமூக மாற்றத்துக்கான முன்னோடி செயற்பாட்டாளர் மீராபாரதி அடங்கலாக நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் குடைச்சாமி சர்வமத பீடத்தின் ஸ்தாபகரும், தலைவருமான ஜீவாகரன் சுவாமிகள் ஆசிர்வாதம் வழங்கினார்.

பருத்தித்துறை முதல் பொத்துவில் வரையான அவருடைய விழிப்பூட்டல் பயணத்தின் நோக்கங்களை மீராபாரதி எடுத்துரைத்தார்.

சைக்கிள் பாவனை ஊக்குவிக்கப்பட வேண்டும், சைக்கிள் பயணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும், பாதுகாப்பான சைக்கிள் பாதைகளை அரசு அமைத்துத் தர வேண்டும், சைக்கிள் பாவனை செலவு குறைந்தது, சிக்கனம் நிறைந்தது, ஆரோக்கியமான வாழ்வியலுக்கு பொருத்தமானது, அற்புதமான உடற்பயிற்சி ஆகும், பொருளாதார ரீதியாக நன்மை வாய்ந்தது மாத்திரம் அல்ல இயற்கை சுற்று சூழல் பாதுகாப்புக்கு உகந்தது போன்ற விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகிறார்.

சைக்கிள் விழிப்பூட்டல் பயணத்தின் மூலமாக வீட்டுத் தோட்டச் செய்கை, பயன் தரும் பழ மரங்களின் நடுகை, உள்ளூர் உற்பத்திகளுக்கான ஊக்குவிப்பு ஆகியன குறித்த விழிப்பூட்டல்களையும் மக்களுக்கு வழங்குகின்றோம் என்று அவர் தெரிவித்தார்.

ஓய்வு நிலை பிரதி அதிபர் எஸ். தில்லையம்பலம், அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன், திடீர் மரண விசாரணை அதிகாரி த. தர்மேந்திரா, அழகுக்கலை நிபுணர் என். ஜெயகலா, அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டு பேரவையின் தலைவர் ஐ. எல். ஜலீல் ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

மீராபாரதி கடந்த 05 ஆம் திகதி பருத்தித்துறையில் இந்த விழிப்பூட்டல் சைக்கிள் பயணத்தை ஆரம்பித்தார். எதிர்வரும் 25 ஆம் திகதி பொத்துவிலில் இந்தப் பயணத்தை நிறைவு செய்யத் திட்டமிட்டுள்ளார். தரித்து நிற்கும் பிரதேசங்களில் விழிப்பூட்டல் கூட்டங் களையும் நடத்தி வருகின்றமை குறிப் பிடத்தக்கது.





# காங்கிரஸ் மாவட்ட தலைவர்கள் பிரியங்கா காந்தியுடன் சந்திப்பு

டில்லியில் முகாமிட்டுள்ள காங்கிரஸ் மாவட்ட தலைவர்கள், பிரியங்கா காந்தியை நேற்று சந்தித்து மாநில காங்கிரஸ் தலைவரை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தினர்.

தமிழக காங்கிரஸ் தலைவராக பொறுப்பேற்ற செல்வப்பெருந்தகை, மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, தொண்டர்களை சந்தித்து கருத்துகளை கேட்டு வந்தார். அப்போது தமிழகத்தில் காங்கிரஸை பலப்படுத்துவோம் என தொண்டர்கள் மத்தியில் உறுதி அளித்திருந்தார்.

அதைத் தொடர்ந்து செயல்படாத மாவட்ட தலைவர்கள் மாற்றப்படுவார்கள் என்றும், நன்றாக வேலை செய்யும் மாவட்டத் தலைவர்கள் அச்சப்படத் தேவையில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட தலைவர் பதவிகளுக்கு இணைய வழி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக செல்வப்பெருந்தகை அறிவித்திருந்தார். இதற்கு மாவட்ட தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அதன் தொடர்ச்சியாக, செல்வப்பெருந்தகை மீது அதிருப்தியில் இருந்த 25 மாவட்ட தலைவர்கள், கடந்த 19 ஆம் திகதி டில்லி சென்று, தமிழக மேலிட பொறுப்பாளரை சந்தித்துப் பேசினர். அப்போது, மாநில தலைவர் செல்வப்பெருந்தகையை மாற்ற வேண்டும் என வலியுறுத்தினர். மாவட்ட தலைவர்களையும், எம்.பி.க்களையும், இதர மக்கள் பிரதிநிதிகளையும் செல்வப்பெருந்தகை மதிப்பதில்லை என குற்றஞ்சாட்டினர்.

தொடர்ந்து, ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே ஆகியோரை சந்தித்து புகார் தெரிவிக்க டில்லியிலேயே முகாமிட்டுள்ளனர். இதற்கிடையில், பிரியங்கா காந்தியை நேற்று சந்தித்து, செல்வப்பெருந்தகையை மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.



# மூன்று மாநிலங்களில் இருந்து கோழி, முட்டை வாங்கத் தடை

ஆந்திரா, தெலுங்கானா, மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் பறவை காய்ச்சல் பரவி வருகிறது. இதனால் ஆயிரக்கணக்கான கோழிகள் பாதிக்கப்பட்டு இறந்து விடுகின்றன. இதனை தொடர்ந்து தடுப்பு நடவடிக்கைகளை தீவிரமாக எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், ஆந்திரா, தெலுங்கானா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் இருந்து கோழி, முட்டை வாங்க இறைச்சி, முட்டை வர்த்தகர்களுக்கு கர்நாடக அரசு தற்காலிகமாக தடை விதித்துள்ளது.

பறவை காய்ச்சல் பரவலை தடுக்கும் விதமாக இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# அமெ. ஜனாதிபதியின் பிரதிநிதி உக்ரைன் அதிபருடன் சந்திப்பு

உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலஸ்கிக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் விசேட தூதுவருக்கும் இடையே சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின்போது, உக்ரைன் யுத்தத்தினை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு நம்பகரமான மற்றும் தெளிவான பாதுகாப்பு உத்தரவாதங்களின் அவசியம் குறித்து விவாதித்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், வெள்ளை மாளிகையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் உரையாற்றிய அமெரிக்கத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் மைக் வால்ற்ஸ், இந்த வாரத்தில் ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளை உக்ரைன் ஜனாதிபதி முன்வைத்தார் என குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதன்காரணமாக அமெரிக்க ஜனாதிபதி விரக்தியான நிலையில் உள்ளார் என குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில், அடுத்த வாரத்தில் பிரித்தானியப் பிரதமர் கெய்ர் ஸ்டாமருக்கும் டொனால்ட் ட்ரம்பிற்கும் இடையே சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சந்திப்பு காசா யுத்த நிறுத்தம்குறித்து முக்கியமானது எனக் கருதப்படுகிறது.







# ஆபத்தான கட்டத்தில் போப் பிரான்சிஸ்

போப் பிரான்சிஸ் தற்போதும் ஆபத்து கட்டத்தில் உள்ளார் என அவரது மருத்துவர் உண்மையை ஒப்புக்கொண்டுள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நாள்பட்ட மூச்சுக்குழாய் அழற்சியின் மேல் கடுமையான நிமோனியா பாதிப்புடன் கடந்த ஒருவார காலமாக போப் பிரான்சிஸ் மருத்துவமனையில் சிகிச்சையிலுள்ளார்.

இந்தநிலையில், போப்பின் நிலை தொடர்பில் முதல்முறையாக தகவல் தெரிவித்துள்ள அவரது மருத்துவர்கள், இன்னும் ஒருவார காலம் போப் பிரான்சிஸ் மருத்துவ சிகிச்சையில் நீடிப்பார் என குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், தமது உடல் நிலை தொடர்பில் ஒளிவு மறைவின்றி உலக மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

88 வயதான போப் பிரான்சிஸ் பிப்ரவரி 14 ஆம் திகதி முதல் ரோம் நகரில் அமைந்துள்ள Gemelli மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளார்.

அவரது நிலை உயிருக்கு ஆபத்தானது அல்ல என்றாலும், குறைந்தது அடுத்த வாரம் முழுவதும் போப் பிரான்சிஸ் மருத்துவமனையில் இருப்பார் என்று அவரது மருத்துவர் நேற்று வெளிப்படுத்தியுள்ளார்.

அவரது உடல் நிலை நாளுக்கு நாள் மாற்றம் கண்டு வருவதாக குறிப்பிட்ட மருத்துவர், இந்த ஞாயிற்றுக் கிழமை வத்திக்கானில் வாராந்திர பொது பிரார்த்தனையை பிரான்சிஸ் தலைமை தாங்குவாரா இல்லையா என்பது அவர்தான் முடிவு செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளார்.

போப் பிரான்ஸ் தற்போது உயிருக்கு ஆபத்தான நிலையில் இல்லை ஆனால் இன்னும் அவர் ஆபத்து கட்டத்தில் இருந்து மீளவில்லை என்றும் மருத்துவமனையில் இருந்து வெளியேறும் அளவுக்கு குணமாகவில்லை என்றும் அவரது மருத்துவர் செர்ஜியோ அல்ஃபியரி தெரிவித்துள்ளார். இதனிடையே, வத்திக்கான் செய்தித் தொடர்பாளர் மேட்டியோ புருனி நேற்று தெரிவிக்கையில், போப் நன்றாக தூங்கி, ஒரு நாற்காலியில் அமர்ந்தபடி காலை உணவை உட்கொண்டார் என்றும், லேசான முன்னேற்றம் அவரது உடல் நிலையில் ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த புதன்கிழமை இத்தாலியின் பிரதமர் ஜார்ஜியா மெலோனி மருத்துவமனையில் நேரில் சென்று நலம் விசாரித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு
சனிக்கிழமை 22/02/2025

## 15 மில்லியன் டொலர் மதிப்புள்ள கார்கள் மீட்பு

ஹாமில்டன் மற்றும் தெற்கு ஒன்டாரியோவில் செயல்பட்ட வாகனத் திருட்டு கும்பலிடமிருந்து 15 மில்லியன் டொலர் மதிப்புள்ள வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன.
ஹாமில்டன் பொலி

02





# கனடாவில் விபத்துக்குள்ளான விமானம் ஓடு பாதையிலிருந்து அகற்றப்பட்டது

**கனடாவில் விபத்துக்குள்ளான விமானம் ஓடு பாதையிலிருந்து அகற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

**கடந்த திங்கள் கிழமை ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் டெல்டா விமான சேவை நிறுவனத்திற்கு சொந்தமான விமானமொன்று விபத்துக்குள்ளானது.**

சீரற்ற காலநிலை காரணமாக விமானம் ஓடு பாதையில் தலைகீழாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 21 பேர் காயமடைந்திருந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது.

விமான விபத்து தொடர்பில் விசாரணை செய்வதற்காக விபத்துக்குள்ளான விமானம் ஓடுபாதையில் அதே நிலையில் காணப்பட்டது.

விசாரணை அதிகாரிகளின் ஆய்வின் பின்னர் குறித்த விபத்துக்குள்ளான விமானம் ஓடு பாதையிலிருந்து அகற்றப்பட்டுள்ளது.



# மிசிசாகாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் பலி

மிசிசாகாவில் இடம்பெற்ற வாகன விபத்து சம்பவத்தில் படுகாயம் அடைந்த 20 வயது இளம்பெண் உயிரிழந்துள்ளார் என பீல் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தின் சிசிடிவி காட்சிகள் ஊடகமொன்றினால் வெளியிடப்பட்டுள்ளது.

ஒரு பெண் வீதியை கடக்கும்போது, வேகமாக வந்த SUV வாகனம் ஒன்றினால் மோதப்பட்டு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தை மேற்கோண்ட நபர் வாகனத்துடன் தப்பிச் சென்றுள்ளார்.

விபத்துக்குள்ளான இளம்பெண் படுகாயங்களுடன் அவசர மருத்துவ மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். சில காலம் சிகிச்சை பெற்று வந்த குறித்த பெண், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என பொலிஸார் கடந்த புதன்கிழமை உறுதிப்படுத்தினர்.

# கனடா பிரதமர் ட்ரூடோவை மீண்டும் ஆளுநர் என குறிப்பிட்டுள்ளார் ட்ரம்ப்



கனடாவை மீண்டும் அமெரிக்காவின் 51 ஆவது மாகாணம் என்று கூறி வம்புக்கிழுத்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்.

கனடாவை அவ்வப்போது அமெரிக்காவின் 51ஆவது மாகாணம் என்று கூறி சீண்டி வந்தார் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்.

இந்நிலையில், மீண்டும் கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாகாணம் என்றும், கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோவை கனடா ஆளுநர் என்றும் கூறியுள்ளார் ட்ரம்ப்.

இம்முறை சற்று சீரியஸாகவே அவர் இடுகை ஒன்றை பதிவேற்றம் செய்துள்ளதுபோல் தெரிகிறது.

அதாவது, கேலி செய்வது போல் பேசாமல், சீரியஸாகவே கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாகாணம் என்றும், கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோவை கனடா ஆளுநர் என்றும் கூறியுள்ளார் ட்ரம்ப்.

கனடா ஹொக்கி அணிக்கெதிராக அமெரிக்க அணி விளையாடுவது தொடர்பில் ட்ரம்ப் வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில், விரைவில் நமது 51ஆவது மாகாணமாக ஆக இருக்கும் கனடாவை எதிர்த்து விளையாடும் அமெரிக்க அணியை உற்சாகப்படுத்துவதற்காக அவர்களுக்கு இந்த செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர்கள் சந்திப்பு இருப்பதால் என்னால் போட்டியைக் காண நேரில் வரமுடியாது.


ஆனால், எல்லோரும் போட்டியைக் காண்போம். போட்டியைக் காண கனடா ஆளுநரான ட்ரூடோவும் நம்முடன் இணைந்துகொள்வாரென்றால், அவரை மனதார வரவேற்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளார் ட்ரம்ப்.

ஆனால், ட்ரம்புக்கு கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ சரியான பதிலடி கொடுத்துள்ளார்.

விடயம் என்னவென்றால் அந்த ஹாக்கி போட்டியில் கனடா அமெரிக்காவை 3க்கு 2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்துவிட்டது.

அதைத் தொடர்ந்து சமூக ஊடகமான எக்ஸில் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ள ட்ரூடோ, நீங்கள் எங்கள் நாட்டை எடுத்துக்கொள்ளமுடியாது, விளையாட்டிலும் எங்களை ஜெயிக்க முடியாது என சுடச்சுட பதிலளித்துள்ளார்!




## 15 மில்லியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

அழகிய மற்றும் உயர்தர வாகனங்களை குறிவைத்து திருடிய இந்த கும்பல், அவற்றை தேசிய மற்றும் சர்வதேச அளவில் விற்பனை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் பொலிஸார் 7 பேரை கைது செய்துள்ளனர் என்பதுடன், மேலும் 19 வயதான ஹாசன் சுலைமான் என்பவரை தேடி வருகின்றனர்.

திருடப்பட்ட வாகனங்கள் இரவு நேரங்களில் கொள்கலன்களில் ஏற்றி அனுப்பப்பட்டுள்ளன.

பெரும்பாலான வாகனங்கள் முதலில் மொண்ட்ரியால் நகருக்கு அனுப்பப்பட்டு, பின்னர் கானா, ஈராக், மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

கனடாவில் விற்பனை செய்யப்பட்ட வாகனங்களின் எண் மாற்றப்பட்டு உள்நாட்டு சந்தையில் மறுசுழற்சி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# அமெரிக்காவை வீழ்த்தி பட்டத்தை வென்றது கனேடிய ஹொக்கி அணி

4 நாடுகளின் நேருக்கு நேர் சம்பியன்ஷிப் போட்டியில் கனடா அணி 3-2 என்ற கோல் கணக்கில் அமெரிக்காவை தோற்கடித்து சம்பியன்ஷிப் பட்டம் வென்றது.

கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான புகழ்பெற்ற ஹொக்கி போட்டியானது பதட்டமான சர்வதேச உறவுகளின் விரிசல்களுக்கு மத்தியில் தூண்டப்பட்ட நிலையில் நடைபெற்றது.

அதனால், இந்தப் போட்டியானது விளையாட்டின் பெருமைக்கு அப்பாற்பட்ட முக்கியத்துவத்தைப் பெற்றதாகத் தோன்றியது.

இரு நாடுகளின் ரசிகர்களும் ஆர்வத்துடனும், மிகுந்த தேசப்பற்றுடனும் போட்டியை கண்டு உணர்ச்சிவசப்பட்டனர்.

போட்டியானது கடந்த வியாழன் இரவு மாசசூசெட்ஸின் பாஸ்டனில் உள்ள ரி.டி. கார்டன் அரங்கத்தில் நடைபெற்றது.

கனடாவின் கானர் மெக்டேவிட் கனடாவுக்காக அதிக நேரத்தில் ஆட்டத்தை வென்ற கோலை அடித்தார்.

இறுதியாக கனடா 3-2 என்ற கோல் கணக்கில் அமெரிக்காவை வீழ்த்தி சம்பியன் ஆனது.






# பறவைக் காய்ச்சல் பரவும் அபாயம்

கனடாவில் பறவைக் காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடா மொத்தம் 500,000 மனித பறவை காய்ச்சல் (Bird Flu) தடுப்பூசிகளை கொள்வனவு செய்துள்ளது.

எதிர்ப்பாராத நிலைமைகளுக்கு தயாராக இருப்பது முக்கியம் என கனடாவின் பொது சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் மருந்துப் பொருள் நிறுவனம் GSK தயாரித்த இந்த தடுப்பூசிகள், அவசியமான தருணங்களில் பயன்படுத்த முன்கூட்டியே பாதுகாப்பு நடவடிக்கையாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு பறவை காய்ச்சல் தொற்று ஏற்படும் அபாயம் தற்போது குறைவாக உள்ளது என்று பொது சுகாதார நிறுவனம் கூறினாலும், அதிகப் பாதிப்பு அடையக் கூடிய நபர்களை பாதுகாக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது.

2023 நவம்பர் மாதம் கனடாவில் முதன்முறையாக ஒரு நபருக்கு H5N1 வைரஸ் உறுதி செய்யப்பட்டது.

உலகளவில் பறவை காய்ச்சல் அதிகரித்து வரும் நிலையில், கோடைகால பறவை இடம்பெயர்ச்சி (Spring Migration) மூலம் வைரஸ் மேலும் பரவலாம் என்ற அச்சம் உள்ளது.

தொற்று அபாய நிலையை கருத்தில் கொண்டு, 60% தடுப்பூசிகள் மாகாணங்களுக்கும் பிரதேசங்களுக்கும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பறவை காய்ச்சல் தடுப்பூசி சாதாரண காய்ச்சலுக்கு (Seasonal Flu) பாதுகாப்பளிக்காது என்பது குறிப்பிடத்தக்கது.